National
Redress Scheme
For people who have experienced
institutional child sexual abuse

# தகவல் ஏடு

# தேசிய குறைதீர்ப்புத் திட்டம் பற்றிய அறிமுகம்

## தேசிய குறைதீர்ப்புத் திட்டம் என்றால் என்ன?

குழந்தை பருவத்தில் நிறுவனம் ஒன்றினால் கவனித்துக் கொள்ளப்பட வேண்டிய நிலையில் இருந்தபோது, பாலியல் துஷ்பிரயோகத்திற்கு ஆளானவர்களுக்கு ஆதரவுதவியளிப்பதற்கான ஒரு வழியே ‘தேசிய குறைதீர்ப்புத் திட்டம்’ ஆகும்.

ஒரு நிறுவனம் என்பது பாடசாலை, தேவாலயம், மசூதி, கோவில், யூத வழிபாட்டுத்தலம், சமய பரப்பு தளம், அனாதை இல்லம், வளர்ப்புப் பராமரிப்பகம், மருத்துவமனை, தடுப்பு மையம் அல்லது விளையாட்டுக் கழகம் போன்ற ஒரு அமைப்பைக் குறிக்கிறது.

அமைப்புகளின் பராமரிப்பகங்களில் வசிக்காத வேளையிலும், சிறுவர் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு ஆளாவதில் இருந்து அந்த நபரைப் பாதுகாக்கக் குறித்த பராமரிப்பகம் தவறிய தருணங்களும் இதில் அடங்கும்.

‘தேசிய குறைதீர்ப்புத் திட்ட’ த்தில் சேர்ந்துள்ள அமைப்புகளின் முழுமையான பட்டியல் www.nationalredress.gov.au - இல் உள்ளது.

## ‘தேசிய குறைதீர்ப்புத் திட்டம்’ வழங்குவது என்ன?

‘தேசிய குறைதீர்ப்புத் திட்டம்’ நீதிமன்றங்கள் மூலம் இழப்பீடு பெறுவதற்குப் பதிலாக உள்ள ஒரு மாற்றுத் திட்டமாகும். இது குழந்தைப் பருவத்தில் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு ஆளானவர்களுக்கு நிகழ்ந்த பாதிப்பை அடையாளம் காண்பதற்கும் அதற்கான பொறுப்பினை அந்த அமைப்புகள் ஏற்கச் செய்வதற்குமான ஒரு வழிமுறையாகும்.

‘தேசிய குறைதீர்ப்புத் திட்ட’ த்தினால் உங்களுக்கு வழங்க முடியுமானவை:

1. ஒரு கொடுப்பனவு
2. அந்தரங்கத் தன்மை வாய்ந்ததும் கலாசார ரீதியாகப் பாதுகாப்பானதுமான இலவச அறிவுரையாலோசனை. (அறிவுரையாலோசனை மற்றும் உளவியல் சேவைகள்)
3. பொறுப்பிற்குரிய நிறுவனத்திடமிருந்து நேரடியான தனிப்பட்ட பதில்.

ஒவ்வொரு விண்ணப்பமும் தனிப்பட்ட அடிப்படையில் பரிசீலிக்கப்படும். உங்களுக்கு வழங்கப்படும் பணத் தொகையானது சூழ்நிலைகளைப் பொறுத்து $150,000 வரை இருக்கலாம்.

‘தேசிய குறைதீர்ப்புத் திட்ட’ த்தின் எந்தப் பகுதிகளின் கீழ் வழங்கப்படும் அளிப்புகளைத் தாம் பெற வேண்டும் என்பதை ஒருவர் தெரிவு செய்யலாம்.

உங்கள் விண்ணப்பம் மற்றும் முடிவு பற்றிய அனைத்து தகவல்களும் பாதுகாக்கப்படும். இவை ‘தேசிய குறைதீர்ப்புத் திட்ட’ த்தின் நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்படும், இதில் தொடர்புடைய நிறுவனங்களுடன் சில தகவல்கள் பகிர்ந்துகொள்ளப்படுவதும் அடங்கலாம்.

## ‘குறைதீர்ப்பிற்கு யாரெல்லாம் தகுதி பெறுவார்கள்?

பின்வருவன பொருந்துமாயின் ‘தேசிய குறைதீர்ப்புத் திட்ட’ த்திற்கு நீங்கள் தகுதி பெறுவீர்கள்:

- நீங்கள் (18 வயதுக்கு கீழ்ப்பட்ட) சிறுவராக இருந்த போது பாலியல் துஷ்பிரயோகத்தை அனுபவித்திருத்தல், மற்றும்
- 2018 ஜூலை 1 இற்கு முன்பு துஷ்பிரயோகம் நடந்திருத்தல், மற்றும்
- நீங்கள் 2010 ஜூன் 30 இற்கு முன்பு பிறந்திருத்தல், மற்றும்
- நீங்கள் விண்ணப்பிக்கும் போது ஒரு ஆஸ்திரேலியப் பிரசையாக அல்லது நிரந்தரக் குடியிருப்பாளராக இருத்தல்.

துஷ்பிரயோகம் நீண்ட காலத்திற்கு முன்பு நடந்திருந்தாலும் நீங்கள் ‘குறைதீர்ப்பிற்கு விண்ணப்பிக்கலாம்.

நீங்கள் பின்வரும் தன்மைகளைக் கொண்டிருந்தால் உங்கள் விண்ணப்பம் வேறு விதத்தில் மதிப்பிடப்படும்:

- ‘தேசிய குறைதீர்ப்புத் திட்ட’ த்தில் சேராத ஒரு அமைப்பினால் துஷ்பிரயோகத்திற்கு உட்பட்டிருத்தல்
- தற்போது 18 வயதுக்குக் கீழ்ப்பட்டவராயிருத்தல்
- ஒரு குற்றத்திற்காக தண்டிக்கப்பட்டு ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டவராயிருத்தல்
- நீதிமன்ற வழக்கொன்றின் விளைவாக துஷ்பிரயோகத்திற்கான கொடுப்பனவுத் தொகையை நீங்கள் ஏற்கனவே பெற்றிருத்தல்.

## எப்படி விண்ணப்பிப்பது

'தேசிய குறைதீர்ப்புத் திட்ட' த்தை அணுக, உங்களுக்கு என்ன நடந்தது என்பதைப் பற்றி நீங்கள் எழுத வேண்டும். உங்கள் படிவத்தை நிரப்ப உங்களுக்கு உதவுவதற்காக நீங்கள் ஒரு ஆதரவுதவிச் சேவையை அல்லது உங்களுடைய நம்பிக்கைக்குரியஒருவரைக் கேட்கலாம்.

நீங்கள் myGov வழியாக ஆன்லைன் மூலமோ அல்லது ஒரு காகிதப் படிவத்தின் மூலமோ விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பத்தின் காகிதப் பிரதியொன்றைப் பெற, நீங்கள்:

- www.nationalredress.gov.au இதிலிருந்து பதிவிறக்கம் செய்யலாம்
- 1800 737 377 என்ற இலக்கத்தில் அழைத்து விண்ணப்பப் படிவமொன்றை உங்களுக்கு அனுப்பும்படிச் செய்யலாம்

- ஆதரவுதவிச் சேவையிடமிருந்து ஒன்றை கேட்டுப் பெறலாம்.

உங்களுக்கு வசதியான ஒரு இடத்தில் அல்லது நேரத்தில் 'தேசிய குறைதீர்ப்புத் திட்ட' ப் படிவத்தை நீங்கள் நிரப்பலாம். 2027 ஜூன் 30 வரை நீங்கள் விண்ணப்பிக்கலாம்.

## எனது விண்ணப்பம் எவ்வாறு பரிசீலிக்கப்படும்?

உங்கள் விண்ணப்பப் படிவம் பூர்த்தி செய்யப்பட்ட பிறகு, அது 'தேசிய குறைதீர்ப்புத் திட்ட' த்திற்குச் செல்லும். அவர்கள் உங்கள் படிவத்தில் நீங்கள் குறிப்பிட்டுள்ள நிறுவனங்களிடமிருந்து தகவல்களைப் பெறுவார்கள். பின்னர் 'சுயாதீன முடிவெடுப்பவர் ஒருவர்' - உங்களுக்கு தீங்கு விளைவித்த நிறுவனங்களில் இல்லாத ஒருவர் - அனைத்து தகவல்களையும் பரிசீலித்து, ஒரு குறைதீர்ப்புப் பரிகாரம் வழங்கப்படுமா என்பது உட்பட முடிவைத் தீர்மானிப்பார்.

சில நேரங்களில், இதற்கு நீண்ட காலம் - ஒரு வருடம் அல்லது அதற்கு மேல் - எடுக்கலாம். இக்காலப் பகுதியில் இன்னும் சில கேள்விகள் உங்களிடம் கேட்கப்படலாம்.

குறைதீர்ப்பிற்கு விண்ணப்பிப்பது மற்றும் வழங்கீடு ஒன்றை ஏற்றுக்கொள்வதா அல்லது நிராகரிப்பதா எனத் தீர்மானிப்பது உட்பட கூடுதல் தகவல்கள், *'குறைதீர்ப்பிற்காக விண்ணப்பித்தல்'* என்ற தலைப்பில் உள்ள தகவல் தாளில் சேர்க்கப்பட்டுள்ளது (ஆங்கிலத்திலும் மற்றும் தமிழ் உட்பட பல மொழிகளிலும் கிடைக்கும்).

## உதவி மற்றும் ஆதரவுதவியைப் பெறல்

'தேசிய குறைதீர்ப்புத் திட்ட' த்துடன் பேசுவதற்கு உங்களுக்கு ஒரு உரைபெயர்ப்பாளர் தேவைப்பட்டால், 'மொழிபெயர்ப்பு மற்றும் உரைபெயர்ப்பு சேவை' (TIS National) மூலம் உரைபெயர்ப்பு சேவைகள் கிடைக்கும்.

நீங்கள் விண்ணப்பிக்க உதவும் ஆதரவுதவிச் சேவைகளை (**குறைதீர்ப்பு ஆதரவுதவிச் சேவைகள்**) நீங்கள் அணுகலாம். இச் சேவைகள் இலவசமானவையும் சுயாதீனமானவையுமாகும். அவர்களால் முடியுமானவை:

- தகுதி பற்றிய தகவல்களை வழங்குதல் மற்றும் பிற விருப்பத் தெரிவுகள் பற்றி உரையாடல்
- விண்ணப்பப் படிவத்தை நிரப்ப உதவுதல்
- எத்தகைய மனவேதனையான உணர்வுகளுக்கும் ஆதரவுதவியை வழங்குதல்
- உங்கள் சார்பாக 'தேசிய குறைதீர்ப்புத்திட்ட'த்துடன் பேசுதல்.

உங்கள் விருப்பத் தெரிவுகளைப் புரிந்துகொள்ள உதவும் இலவச சட்ட ஆலோசனை மற்றும் நிதி ஆதாரவுதவிச் சேவைகள் உள்ளன. உடலியலாமையுடையவர்கள், கலாச்சார ரீதியாக வேறுபட்ட பின்னணிகளைச் சேர்ந்தவர்கள், இளைஞர்கள், பழங்குடியினர் மற்றும் 'டோரஸ் ஜலசந்தி தீவு' மக்கள், பராமரிப்பில் இருந்து வெளியேறியவர்கள் மற்றும் சிறுவராய்ப் புலம்பெயர்ந்தவர்கள் ஆகியோருக்கும் சிறப்புத்தேர்ச்சி பெற்றோரின் சேவைகளும் கிடைக்கின்றன.

உங்கள் விருப்பத் தெரிவுகளைப் பற்றி மேலும் அறிய அல்லது ஒரு ஆதரவுதவிச் சேவையுடன் தொடர்புகொள்ள, இவற்றில் ஒன்றைச் செய்க:

**www.nationalredress.gov.au** இற்குச் செல்லவும், அல்லது

'தேசிய குறைதீர்ப்புத் திட்ட' த்தை **1800 737 377** என்ற இலக்கத்தில் அழைக்கவும்.

உங்களுக்கு ஒரு உரைபெயர்ப்பாளர் தேவைப்பட்டால், '**TIS நேஷனல்**' -ஐ **131 450** என்ற இலக்கத்தில் அழைத்து, 'தேசிய குறைதீர்ப்புத் திட்டத்' தை 1800 737 377 என்ற இலக்கத்தில் அழைக்கும்படிச் சொல்லுங்கள்.

## நிறுவனங்கள் எவ்வாறு பொறுப்பேற்குமாறு செய்யப்படுகின்றன?

பாலியல் துஷ்பிரயோகத்தைத் தடுத்திருக்க வேண்டிய நிறுவனங்களின் மீதே அதற்கான பொறுப்பினை 'தேசிய குறைதீர்ப்புத் திட்டம்' சுமத்துகின்றது.

உங்களைத் துஷ்பிரயோகம் செய்த நபருடன் ஒரு நிறுவனம் உங்களைத் தொடர்புகொள்ளுமாறு செய்திருந்தால், அதற்கு அந்த நிறுவனமே பொறுப்பாகும்.

உதாரணமாக, சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் பின்வரும் இடமொன்றில் நடந்திருந்தால்:

- பாடசாலை, தேவாலயம், கிளப் அல்லது அனாதை இல்லம் போன்ற ஒரு வளாகத்தில்
- முகாம் அல்லது விளையாட்டு வசதி போன்ற ஒரு நிறுவனத்தின் செயல்பாடுகள் நடைபெறும் இடத்தில்
- ஒரு ஆசிரியர், ஒரு மதப் பிரமுகர், ஒரு விளையாட்டுப் பயிற்சியாளர் அல்லது முகாம் தலைவர் போன்ற ஒரு நிறுவனத்தின் அதிகாரியால் வேறு ஒரு இடத்தில் துஷ்ப்பிரயோகம் இழைக்கப்பட்டிருந்தால்.

ஒன்றிற்கும் மேற்பட்ட நிறுவனங்களில் நீங்கள் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டிருந்தால் எமக்கு அதைத் தெரிவிப்பதற்கான இடம் விண்ணப்பப் படிவத்தில் உள்ளது.

உங்கள் விண்ணப்பத்தில் நீங்கள் பெயரிடப்பட்டுள்ள நிறுவனங்களில் ஏதேனும் ஒன்று 'தேசிய குறைதீர்ப்புத் திட்ட' த்தில் சேர்ந்திருக்கவில்லை என்றால், உங்களால் என்ன செய்ய முடியும் என்பதை விளக்க நாங்கள் உங்களுடன் தொடர்புகொள்வோம்.

குறிப்பிட்டதொரு நிறுவனம் 'தேசிய குறைதீர்ப்புத் திட்ட' த்தில் சேரும் வரை நீங்கள் காத்திருக்கலாம், அல்லது உங்கள் விண்ணப்பத்தைத் தற்போதே பரிசீலிக்கும்படி எங்களைக் கேட்கலாம்.

### எச்சரிக்கை

'நிறுவன அமைப்பில் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம்' என்பது என்ன என்பதைப் பற்றிய வரையறையைப் பின்வரும் பகுதி அளிக்கிறது.

இதனைப் படிக்கும் போது உங்களுக்கு மனவேதனையாக இருக்கலாம்.

உங்கள் மன உணர்வுகள் பற்றி ஒருவரிடம் நீங்கள் பேச விரும்பினால், 1800 737 377 என்ற இலக்கத்தை அழைப்பதன் மூலம் இலவச மற்றும் இரகசிய ‘குறைதீர்ப்பு ஆதரவுதவி சேவை’ (Redress Support Service) களுடன் நீங்கள் தொடர்புகொள்ளலாம்.

உங்களுக்கு உடனடியாக உதவி தேவைப்பட்டால், அழைக்கவும்:

- ‘பியாண்ட் ப்ளூ’ (Beyond Blue) 1300 22 4636
- ‘உயிர்-காப்பு இணைப்பு’ (Lifeline) 13 11 14
- 1800 ‘ரெஸ்பெக்ட்’ (Respect) 1800 737 732
- ‘தற்கொலைத் தடுப்பு மீள் அழைப்புச் சேவை’ (Suicide Call Back Service) 1300 659 467
- ‘ஆடவர் உதவி இணைப்பு’ (Mensline) 1300 78 99 78

அவசரகால நிலையொன்றில் ‘மூன்று பூச்சிய’ த்தை (000) அழைக்கவும்.

## சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் என்றால் என்ன?

சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் என்பது 18 வயதிற்குக் கீழ்ப்பட்ட ஒருவரை அவரது சம்மதமில்லாமலோ, அவருக்குப் புரியாத நிலையிலோ பாலியல் செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதாகும்.

சிறுவர் பாலியல் துஷ்பிரயோகத்தில் பின் வருவன உள்ளடங்கலாம் (ஆனால் இவை மட்டும் அல்ல):

- ஆடைக்கு மேலாக, அல்லது ஆடையற்ற நிலையில் உடலின் ஏதேனும் ஒரு பகுதியை, பாலியல் ரீதியாகத் தொடுதல்
- சீர்ப்படுத்தல் - ஒரு பிள்ளைக்கு பாலியல் நடவடிக்கைகளை அல்லது பொருத்தமற்ற வஸ்துகளைக் காண்பிப்பது உட்பட, பாலியல் நடவடிக்கைகளில் ஈடுபட அப்பிள்ளையைத் தயார்படுத்துதல் அல்லது ஊக்குவித்தல்
- ஒரு பிள்ளையுடன் ஏதேனும் ஒரு வகையில் பாலுறவில் ஈடுபடல்
- ஒரு பாலியல் நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு ஒரு பிள்ளையை இணங்கச் செய்தல் அல்லது கட்டாயப்படுத்துதல்
- எந்தவொரு பாலினப் பிள்ளையுடனும், எந்தவொரு வயதுவந்த பாலினத்தவரும் செய்யும் பாலியல் செயற்பாடுகள்.